2022 ஏப்ரல் 21] [திரு. ஜே.ஜே. எபினேசர் (எ) ஜான் எபினேசர்]

தந்தை பெரியார் சமத்துவபுரம் வீடுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவிகிதம் வீடுகள் ஒதுக்கீடு செய்ய அரசாணை வெளியிட்டது நமது கழக அரசு. அரசுப் பணியில் பணியாற்றிடும் மாற்றுத் திறனாளிகளுக்கு போக்குவரத்து பயணப்படியை 300 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கியது நமது கழக அரசு. டிசம்பர் 3, சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஊதியத்துடன்கூடிய விடுமுறை வழங்கிட உத்தரவு பிறப்பித்தது நமது கழக அரசு.

சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– ஆக மாதச் சம்பளத்தை இரு மடங்காக்கி உயர்த்தி வழங்கியது நமது கழக அரசு. மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகையினை இரண்டு மடங்காக உயர்த்தியது நமது கழக அரசு.

அரசுத் துறையில் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகள், அலுவலகம் முடிந்து வீடு திரும்பும்போது, 15 நிமிடங்களுக்கு முன்னதாக வீட்டுக்குப் புறப்பட அரசாணை வெளியிட்டது நமது கழக அரசு.

தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்பார்கள். தற்போது நம் அன்புத் தலைவர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையினை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு, மீண்டும் பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி, மாற்றுத் திறனாளிகளின் நம்பிக்கையாக விளங்குகின்றார்.

மாற்றுத் திறனாளிகளின் நீண்ட நாள் கோரிக்கையான மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்தில், துணையாருடன் சென்று வர முற்றிலும் இலவசம் என அரசாணை வெளியிட்டது நம்முடைய தலைவர் தளபதி தலைமையிலான நமது அரசு. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 2,000/– மாதாந்திர உதவித் தொகையினை உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்தது நமது அரசு. அனைவருக்கும் இலவச ஸ்கூட்டி வழங்கிட ஆணை பிறப்பித்தது நமது அரசு.

பிற்பகல் 1–25

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் போட்டியிட சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவு